செய்தி வெளியீடு எண்: 739 நாள்: 15.10.2018

## செய்தி வெளியீடு

### அளவு குறைவாக விநியோகித்த பெட்ரோல் / டீசல் விற்பனை நிறுவனங்களின் மீது தொழிலாளர் துறை நடவடிக்கை

தமிழ்நாட்டில் இயங்கி வரும் பெட்ரோல் மற்றும் டீசல் பம்புகளில் வாடிக்கையாளர்களுக்கு சரியான அளவில் பெட்ரோல் / டீசல் விநியோகிக்கப்படுவதை உறுதி செய்யும் வகையில் தொழிலாளர் துறை அமுலாக்க அதிகாரிகளால் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை முறையான ஆய்வும், புகார் பெறப்படும் நேர்வில் சிறப்பாய்வும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வகையில் தொழிலாளர் ஆணையர் முனைவர். இரா. நந்த கோபால் , இ.ஆ.ப., அவர்கள் அறிவுரையின் பேரில் அக்டோபர் 2018ம் மாதத்தில் 10, 11 மற்றும் 12 ஆகிய தேதிகளில் தமிழகத்திலுள்ள அனைத்து பெட்ரோல் மற்றும் டீசல் பம்புகளில் அந்தந்த மாவட்ட தொழிலாளர் உதவி ஆணையர்கள் (செயலாக்கம்) தலைமையில் சிறப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

மேற்கண்ட ஆய்வின் போது, தமிழகத்தில் உள்ள 818 பெட்ரோல் / டீசல் விற்பனை நிறுவனங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, இதில் சென்னை மண்டலத்தில் 34 நிறுவனங்கள் மீதும் கோவை மண்டலத்தில் 24 நிறுவனங்கள் மீதும், திருச்சி மண்டலத்தில் 30 நிறுவனங்கள் மீதும், மதுரை மண்டலத்தில் 39 நிறுவனங்கள் மீதும் ஆக மொத்தம் 127 பெட்ரோல் / டீசல் வழங்கும் நிறுவனங்களில் அளவு குறைவாக விநியோகம் செய்யப்பட்டது கண்டறியப்பட்டது. அவ்வாறு சட்டவிதிகளுக்கு முரணாக அளவு குறைவாக விற்பனை செய்த பெட்ரோல் / டீசல் பம்புகளில் விற்பனை தடைசெய்யப்பட்டு சம்மந்தப்பட்ட நிறுவனங்கள் மீது சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நுகர்வோர்கள் பெட்ரோல் மற்றும் டீசல் பம்புகளில் எரிபொருள் நிரப்பும் போது பெட்ரோலிய எரிபொருள்கள் நிரப்பும் அளவு காட்டி, பெட்ரோல் நிரப்புவதற்கு முன்பு பூஜ்ஜியத்தில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். மேலும் அளவு குறைவாக விற்பனை செய்வதாக நுகர்வோர் கருதும் பட்சத்தில் அந்தந்த நிறுவனங்களில் பராமரிக்கப்பட்டுவரும் 5 லிட்டர் கொள்ளளவு உள்ள முத்திரையிடப்பட்ட கூம்பிய அளவினை பயன்படுத்தி விநியோகிக்கப்படும் பெட்ரோல் / டீசல் அளவினை நுகர்வோர் சரிபார்த்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பெட்ரோல் / டீசல் விற்பனை நிறுவனங்களில் அளவு குறைவாக விநியோகிப்பது, நியாயவிலை கடைகளில் உணவு பொருள்கள் மற்றும் மண்ணெண்ணெய் அளவு குறைவாக விநியோகிப்பது மற்றும் பொட்டலப் பொருள்களில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகபட்ச சில்லரை விற்பனை விலைக்கு (MRP) அதிகமாக கடைகளில் விற்பனை செய்வது போன்ற குறைபாடுகள் கண்டறியும் நேர்வில் நுகர்வோர் புகார்களை தெரிவிக்க தொழிலாளர் துறையினால் அறிமுகப்படுத்தப்பட்டு பயன்பாட்டில் இருந்து வரும் TN-LMCTS (Tamil Nadu Legal Metrology Complaint Tracking System) என்ற கைபேசி செயலியை Google Playstore மூலம் பதிவிறக்கம் செய்து அதன் வாயிலாக நுகர்வோர்கள் / பொதுமக்கள் புகார் அளித்து உரிய நிவாரணம் காணலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**